தமிழ்நாடு அரசு. இந்துசமய அறநிலையத்துறை

## அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்,

சிவன்மலை, காங்கயம் வட்டம், திருப்பூர் மாவட்டம்.

# வேலை வாய்ப்பு விளம்பர அறிவிப்பு

திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம், சிவன்மலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் காலியாக உள்ள வெளித்துறை மற்றும் தொழில்நுட்ப பணியிடங்களில் கீழ்க்காணும் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்கு தகுதியுடைய 18 முதல் 45 வயது நிரம்பிய இந்து மதத்தை சேர்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பதவியின் பெயர் | எண்ணிக்கை | சம்பள விகிதம் | கல்வித்தகுதி |
|---|---|---|---|---|
| 1. | வழக்கு எழுத்தர் | 1 | 18500 – 58600 pay Matrix–22 | பத்தாம் வகுப்பு தேர்ச்சி அல்லது அதற்கு இணையான கல்வித்தகுதி பெற்றிருத்தல் வேண்டும். |
| 2. | சீட்டு விற்பனை எழுத்தர் | 2 | 18500 – 58600 pay Matrix–22 | பத்தாம் வகுப்பு தேர்ச்சி அல்லது அதற்கு இணையான கல்வித்தகுதி பெற்றிருத்தல் வேண்டும். |
| 3. | தட்டச்சர் | 1 | 18500 – 58600 pay Matrix–22 | (1) பத்தாம் வகுப்பு தேர்ச்சி அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு இணையான கல்வித்தகுதி மற்றும்<br>(2) அரசு தொழிநுட்ப தட்டச்சர் தேர்வில் தட்டச்சு தேர்ச்சி பெற்றிருத்தல்<br>(3)(i) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் முதுநிலை அல்லது தமிழில் முதுநிலை மற்றும் ஆங்கிலத்தில் இளநிலை (அல்லது) ஆங்கிலத்தில் முதுநிலை தமிழில் இளநிலை<br>**(4)** ஆனால், இனம் (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியை விண்ணப்பதாரர் பெறாத நேர்வில் இனம் (ii)இல் உள்ள தகுதிகளைக் பெற்ற விண்ணப்பதாரர்கள் மேற்சொன்ன முன்னுரிமை வரிசையில் நியமிக்கப்படலாம் கணினி பயன்பாடு மற்றும் அலுவலக தானியக்கத்தில் சான்றிதழ் படிப்பில் தேர்ச்சி அல்லது அதற்கு இணையான அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| 4. | காவலர் | 4 | 15900–50400 Pay Matrix–17 | தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும். |
| 5. | தோட்டக் காரர் | 1 | 11600–36800 pay matrix–12 | தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும். |
| 6. | திருவலகு | 2 | 15900–50400 Pay Matrix – 17 | தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும். |
| 7. | கூர்க்கா | 1 | 15900 – 50400 Pay Matrix – 17 | தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | உதவி மின் பணியாளர் | 1 | 16600–52400 Pay Matrix –18 | 1. அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட மின்/மின் கம்பிப்பணியாளர் தொழிற்பயிற்சி நிறுவனச்சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.<br>**2.** மின் உரிமம் வழங்கல் வாரியத்திடமிருந்து 'H' சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |

விண்ணப்ப படிவம், தகுதிகள் மற்றும் இதர விவரங்கள் https://sivanmalaimurugan.hrce.tn.gov.in என்ற திருக்கோயில் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய தகுதிச்சான்றுகளுடன் நேரடியாகவோ தபால் மூலமாகவோ 18.04.2023 தேதி முதல் 17.05.2023 வரை மாலை 5.45 மணிக்குள் திருக்கோயில் அலுவலகத்தில் கொடுக்க வேண்டும். மேற்படி தேதிக்கு முன்னதாகவோ அல்லது பின்னதாகவோ வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

<u>விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி</u>
உதவி ஆணையர்/செயல் அலுவலர்,
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்,
சிவன்மலை–638701, காங்கயம் வட்டம், திருப்பூர் மாவட்டம்.

மொ. அன்னக்கொடி எம்.ஏ., பி.எல்., எம்.பி.ஏ.,
உதவி ஆணையர்/செயல் அலுவலர் (கூ.பொ).

இரா. செந்தில்குமார்
தக்கார்/ உதவி ஆணையர் (கூ.பொ).

நாள். 17.04.2023.
இடம். சிவன்மலை.

## நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரர் 01.07.2022ம் தேதி அன்று 18 வயது பூர்த்தியடைந்தவராகவும், 45 வயது மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
2. இந்து மதத்தைச் சார்ந்தவராகவும், இறை நம்பிக்கை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
3. ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.
4. இவ்விளம்பரம் செய்யப்பட்ட தேதிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.
5. விண்ணப்பத்துடன் கல்வித் தகுதிக்குரிய சான்றிதழ்கள் மற்றும் கூடுதல் கல்வித்தகுதிக்கான சான்றிதழ்கள் மற்றும் ஆதார், வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை போன்ற பிற ஆவணங்களுக்கு அரசிதழ் பதிவுபெற்ற அலுவலரிடம் சான்றொப்பம் (Attested Xerox copy only) அனுப்பப்பட வேண்டும்.
6. விண்ணப்பதாரர் வயதிற்கான சான்று ஆவணம் அல்லது கல்வி நிலையத்தால் வழங்கப்பட்ட மாற்று சான்றிதழ் (Transfer Certificate)நகல் இணைக்கப்பட வேண்டும்.
7. விண்ணப்ப படிவத்தில் விவரங்களை முழுமையாக பூர்த்தி செய்யப்படாமலும், கேட்கப்பட்ட சான்று நகல்கள் இணைக்கப்படாமலும், பெறப்படும் விண்ணப்பங்கள் ஆரம்ப நிலையிலேயே நிராகரிக்கப்படும்.
8. தேர்ந்தெடுக்கப்படும் பணியாளர் இத்திருக்கோயிலின் உபகோயில்களுக்கும், பணியிடம் மாறுதல் செய்யப்படுவார்.
9. பணிக்கு தேர்வாகும் விண்ணப்பதாரர் பணியில் சேர வரும் நேரத்தில் விண்ணப்பதாரர் வசிக்கும் எல்லைக்கு உட்பட்ட காவல் நிலையத்தில் விண்ணப்பதாரர் மீது குற்றவியல் நடவடிக்கை ஏதும் இல்லை என்ற சான்றிதழ் மற்றும் உடல் தகுதி சான்றிதழ்களில் அசல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
10. விண்ணப்பங்களை அனுப்பும் போது மேல் உறையின் மீது பதவியின் பெயரை குறிப்பிட்டு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அனுப்பப்பட வேண்டும்.
11. நேர்முக தேர்வில் கலந்து கொள்வதற்கு எவ்வித பயணப்படியும், வழங்கப்படமாட்டாது.
12. விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் கல்வி தகுதி மற்றும் பிற தகுதிக்குரிய ஆவணங்களின் அசல் சான்றிதழ்கள் நேர்முக தேர்வின் போது கண்டிப்பாக கொண்டு வரப்பட வேண்டும்.
13. விண்ணப்பதாரரால் தெரிவிக்கப்படும் விவரங்கள் அனைத்தும் சரியானவை என உறுதியளிக்க வேண்டும், தவறான தகவல்கள் அல்லது போலியான ஆவணங்கள் ஏதேனும் அளித்து பணி நியமன ஆணை பெறப்படும் பட்சத்தில் எவ்வித முன் அறிவிப்புமின்றி பணி நீக்கம் செய்தும், சட்ட ரீதியான குற்றவியல் நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படுவர்.
14. நிர்ணயிக்கப்பட்ட காலகெடுவிற்குள் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எற்றுக்கொள்ளப்படும், மேலும், தகுதியான விண்ணப்பதாரர்கள் மட்டுமே பரிசீலனைக்கு பின்னர் நேர்முக தேர்விற்கு அழைக்கப்படுவர். தகுதி இல்லாத விண்ணப்பங்களுக்கு திருக்கோயிலிருந்து எவ்வித தகவலும் அனுப்பப்படமாட்டாது.

15.விண்ணப்பதாரர்களால் வழங்கப்படும் சான்றுகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறைகளின் மூலம் உண்மைத்தன்மை குறித்து பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.
16.திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், அவர்களின் வாரிசுதாரர்கள், அரசு பணி மற்றும் பொது நிறுவனங்கள், இதர திருக்கோயில்களின் பணிபுரிந்து தண்டனை காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.
17.உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் சான்றிதழ் நகல்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் காரணம் தெரிவிக்கப்படாமல் நிராகரிக்கப்படும்.
18.பணிநியமனம் அரசாணை எண்.114 சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி.4–2), நாள்.03.09.2020 விதிகளுக்குட்பட்டது அரசாணை எண்.219 சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி.4–2) நாள்.02.09.2022 விதிகளுக்குட்பட்டது.
19.அரசாணை (நிலை) எண்.114 சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி.4–2) துறை) நாள்.03.09.2020 விதி எண்.9–ன்படி முதுநிலை அல்லாத திருக்கோயில்களில் பணிபுரியும் தகுதியான பணியாளர்கள் விண்ணப்பிக்கலாம்.
20. தேர்வு முறையானது அடிப்படை கல்வித்தகுதி, அனுபவம், செயல்முறை தேர்வுகள் கூடுதல் தகுதி மற்றும் நேர்முக தேர்வு ஆகியவற்றில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் நடைபெறும்.
21.விண்ணப்ப படிவத்தினை https://sivanmalaimurugan.hrce.tn.gov.in என்ற திருக்கோயில் இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது திருக்கோயில் அலுவலகத்தில் ரூ.50/– செலுத்தி விண்ணப்பத்தினை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
22. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய சான்றுகளுடன், அஞ்சல் உறையில் பணியிட வரிசை எண். மற்றும் பணியிடத்திற்கான விண்ணப்பம் என தெளிவாக குறிப்பிட்டு " உதவி ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை, காங்கயம் வட்டம், திருப்பூர் மாவட்டம் – 638701" என்ற முகவரிக்கு நேரிலோ/அஞ்சல் மூலமாகவோ அனுப்ப வேண்டும். மேலும் ரூ.25/– மதிப்புள்ள அஞ்சல் வில்லை ஒட்டிய சுயவிலாசமிட்ட ஒப்புகை அட்டையுடனும் அஞ்சல் உறையுடனும் இணைத்து அனுப்ப வேண்டும்.
23. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 17.05.2023 பிற்பகல் 5.45 மணிக்குள்.

மொ. அன்னக்கொடி எம்.ஏ., பி.எல்., எம்.பி.ஏ.,
உதவி ஆணையர்/செயல் அலுவலர் (கூ.பொ).

இரா. செந்தில்குமார்
தக்கார்/ உதவி ஆணையர் (கூ.பொ).

# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்,
## சிவன்மலை, காங்கயம் வட்டம், திருப்பூர் மாவட்டம்.

விண்ணப்பதாரரின் புகைப்படம் சான்றொப்பத்துடன்

**பதவியின் பெயர்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | பெயர் | : | |
| 2 | தந்தை/ கணவர்/ பாதுகாவலர் பெயர் | : | |
| 3 | பிறந்த தேதி மற்றும் வயது (பள்ளிச்சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 4 | பாலினம் (ஆண்/பெண்) | : | |
| 5 | நிரந்தர முகவரி | : | |
| 6 | 12 இலக்க ஆதார் அட்டை எண் குறிப்பிடவும் (சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 7 | தொலைபேசி எண்/கைபேசி எண். | : | |
| 8 | மின்னஞ்சல் முகவரி | : | |
| 9 | மதம் (சாதிச்சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 10 | விண்ணப்பதாரர்கள் 01.07.2022 அன்று 18 வயது பூர்த்தியடைந்தவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். | : | |
| 11 | கல்வித்தகுதி (நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதிக்கான சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) | : | |

| | | | |
|---|---|---|---|
| 12 | வெளித்துறை மற்றும் உள்துறை பணியிடத்திற்கான கல்வித் தகுதி (நிர்ணயிக்கப்பட்ட வெளித்துறை மற்றும் கல்வித் தகுதிக்கான சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 13 | இதர தகுதிகள் ஏதும் இருப்பின் இணைக்கப்பட வேண்டும். | : | |
| 14 | அரிசிதழ் பதிவுபெற்ற அதிகாரியிடமிருந்து 16.04.2023–க்கு பின்னர் பெறப்பட்ட நன்னடத்தை சான்று இணைக்கப்பட வேண்டும். | : | |
| 15 | நன்னடத்தை சான்று இறுதியாக பயின்ற பள்ளி/ கல்லூரியில் பெறப்பட்ட சான்று நகல். | : | |
| 16 | குற்றவியல் நடவடிக்கை இருப்பின் அதன் விவம்.<br>அ) பதிவு செய்யப்பட்டுள்ளதா?<br>ஆ) நிலுவையிலுள்ளதா?<br>இ)தண்டனை வழங்கப்பட்டுள்ளதா? | : | ஆம்/இல்லை.<br>ஆம்/இல்லை.<br>ஆம்/இல்லை. |
| 17 | விண்ணப்பிக்கும் பணியில் முன் அனுபவம் இருப்பின் அதன் விவரம் பிற நிறுவனங்களில் பணிபுரிந்த அனுபவம் (சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 18 | பொதுவானவை | : | |
| 19 | இந்து சமய அறநிலையத்துறை ஆளுகையின் கீழ் உள்ள முதுநிலை அல்லாத திருக்கோயில் பணியாளர் எனில் அதன் விவரம்<br>அ) பெயர் | : | |

| | | | |
|---|---|---|---|
| | ஆ) தந்தை/கணவர்/பாதுகாவலர் | : | |
| | இ) பதவி | : | |
| | ஈ) பணியில் சேர்ந்த நாள் | : | |
| | உ) பணிபுரியும் திருக்கோயில் | : | |
| | ஊ) பணிபுரிந்து வருவதற்கான சான்று | : | |
| | எ) நன்னடத்தை சான்று | : | |

## உறுதிமொழி

------------------------ ஆகிய நான் ---------------------------

தந்தை/கணவர்/ பாதுகாவலர் பெயர் இவ்விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள மேற்காணும் அனைத்து தகவல்களும், இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களும் சரியானவை என உறுதி கூறுகிறேன். எதிர்காலத்தில் மேற்படி தகவல்கள் தவறானவை எனவும், இணைக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை எனவும் தெரியவந்தால், என் மீது திருக்கோயில் நிர்வாகத்தால் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பணி நீக்கம் செய்யவும், குற்றவியல் நடவடிக்கைகளுக்கு கட்டுப்படவும் சம்மதித்து உறுதி அளிக்கிறேன்.

விண்ணப்பதாரர் கையொப்பம்.

நாள்:

இடம்: